Rgistered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 21 (05-01-1993) செவ்வாய்க்கிழமை ஓசை 322

## பாடசாலை அனுமதிக்கு நன்கொடை வசூலிப்பு

பாடசாலைகளில் புதிதாக அனுமதிகோரி விண்ணப்பிக்கும் மாணவர்களிடம் 'டொனேஷன்' என்றழைக்கப்படும் நன்கொடைப் பணம் கட்டுமாறுகூறி அதிபர்கள் பணவசூல் செய்வதாகப் பெற்றோர்கள் கவலைதெரிவிக்கிறார்கள். இந்தப் பணம் பாடசாலை அனுமதியின்போது வற்புறுத்திப் பெறப்படுவதாகவும் சொல்லப்படுகிறது பெரிய, சிறிய பாடசாலைகள் என்ற வித்தியாசமின்றிப் பொதுவாக எல்லாப் பாடசாலைகளிலும் இந்தப்பணம் வசூலிக்கப்படுவது நடைமுறையாகிவிட்டது. கல்லூரி அதிபர்கள் நன்கொடைப் பணத்தைப் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்துக

## மேற்குலகம் அரசிடம் வற்புறுத்து

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு சில மேற்கு நாடுகள் சிறிலங்கா அரசாங்கத்தை வற்புறுத்தி வருவதாக மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாதெனவும், யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என இம்மேற்கு நாடுகள் சிறிலங்காவை வற்புறுத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு வற்புறுத்தியுள்ள நாடுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் சில முக்கிய பங்காற்றியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு வற்புறுத்தும் நாடுகள் வெளிப்படையாக யுத்தம் தொடர்ந்தால், பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும், மனித உரிமை மீறல்கள் இடம்பெறவும், இதனால் சிறிலங்காவிற்கான உதவிகள் பாதிக்கப்படலாம் எனவும் தெரிவிப்பதாக அறியமுடிகின்றது.

ஆனால், இந்த மேற்கு நாடுகள், இவ்விடயத்தில் கொண்டுள்ள கவனத்திற்கு தமது நாடுகளில் உள்ள தமிழ் அகதிகளை விரைவில் இலங்கை திருப்பியனுப்ப முற்படுகின்றமையே காரணம் எனத் தெரியவருகின்றது. விடுதலைப் புலிகளும் - அரசாங்கமும் பேச்சுக்களை ஆரம்பித்துவிட்டால், அதைச் சாட்டாக வைத்து சுமுக நிலை உருவாகிவிட்டதாக அறிவித்துவிட்டு அகதிகளைத் திருப்பி அனுப்பிவிடலாம் என எண்ணுவதாகத் தெரியவருகின்றது.

### பொருளாதார தடையை கண்டித்து

## போராட்டம் நடாத்த வெகுஜன அமைப்பு முடிவு

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையைக் கண்டித்து மாபெரும் வெகுஜனப் போராட்டம் ஒன்றைநடாத்த தமிழீழ வெகுஜன அமைப்புகள் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா அரசு தமிழீழத்தில் பல்வேறுவித இராணுவ அழுத்தங்களைப் பிரயோகித்து பொருளாதாரத் தடையை மேற்கொண்டு தமிழீழ மக்களை பட்டினிச் சாவிற்கு இட்டுச்செல்ல முயல்

இதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று மாலை 3 00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் ஆலோசனைக் கூட்டத்தில் தமிழீழத்திலுள்ள வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர்கள், சகல தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள், வர்த்தக சங்கங்களினதும் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பல்கலைக் கழக மாணவ அமைப்புக்களின் கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், தனியார் அரச போக்குவரத்து சங்க உறுப்பினர்கள், சகல மத தாபனங்களின் உறுப்பினர்கள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், புனர்வாழ்வுக் கழகங்கள். தீவக மக்கள் நலன் காக்கும் கழக உறுப்பினர்கள், மகளிர் அமைப்புக்களின் உறுப்பினர்கள், மற்றும் ஏனைய சமய சமூக ஸ்தாபனத்தின் பிரதி

### வீரச்சாவு





'தமிழோசை' வீடியோ பட இயக்குனர் பொ. தாசன் தலைவரிடமிருந்து பரிசு பெறுகிறார்.



'தமிழோசை' வீடியோ படத்தில் நடித்த செல்வி

இவ்வாறு வற்புறுத்தி யுள்ள நாடுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் சில முக் கிய பங்காற்றியுள்ளதாகவும்

## வீரச்சாவு



2ஆம் லெப்டினன்ட் மாமா



வீரவேங்கை சாரதி

வவுனியா பாவற்குளம், 5ஆம் யுனிட், 29ஆம் பகுதி ஆகிய இடங்களை சுற்றி வளைத்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகள் போராளிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இரண்டு போராளிகளும் ஒரு ஆதர வாளரும் வீரச்சாவு அடைந் தனர்.

நேற்றுக் காலை 5.45 மணி யளவில் இடம் பெற்ற இம் மோதலில் 2ஆம் லெப்டினன்ட் மாமா (சூசைப்பிள்ளை ஜேசு தாஸ் இளவாலை, யாழ்ப் பாணம்), வீரவேங்கை சாரதி (இராமு பாக்கிய நாதன் கொள்ளன் விளாங்குளம், மல்லாவி) ஆகிய போராளி களும், ஆதரவாளரான சித்திரவேல்பரமு (29ஆம் திட் டம் 5ஆம்படிவம் பாவற்குளம்) ஆகியோரே வீரச்சாவு அடைந் தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# போராட்டம் நடாத்த வெகுஜன அமைப்பு முடிவு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் பொரு ளாதாரத் தடையைக் கண் டித்து மாபெரும் வெகுஜனப் போராட்டம் ஒன்றைநடாத்த தமிழீழ வெகுஜன அமைப்பு கள் ஒன்றியம் தீர்மானித் துள்ளது.

சிறிலங்கா அரசு தமிழீழத் தில் பல்வேறுவித இராணுவ அழுத்தங்களைப் பிரயோ கித்து பொருளாதாரத் தடையை மேற்கொண்டு தமி ழீழ மக்களை பட்டினிச் சாவிற்கு இட்டுச்செல்ல முயல் கிறது. இதனை வன்மையாக கண்டித்து தமிழீழ மக்களின் எதிர்ப்பைக் காண்பிக்கும் முக மாக மாபெரும் வெகுஜனப் போராட்டம் ஒன்றைநடாத்த தமிழீழ வெகுஜன அமைப்பு களின ஒன்றியம தீர்மானித் துள்ளது.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று மாலை 3.00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் ஆலோசனைக் கூட்டத் தில் தமிழீழத்திலுள்ள வெகு ஜன அமைப்புகளின் உறுப் பினர்கள், சகல தொழிற் சங் கங்களின் உறுப்பினர்கள், வர்த்தக சங்கங்களினதும் சன சமூக நிலையங்களின் உறுப் பினர்கள், ஆசிரியர்கள் மாண வர்கள், பல்கலைக் கழக மாணவ அமைப்புக்களின் உறுப்பினர்கள், அரசாங்க திணைக்கள ஊழியர் சங்கங் களின் பிரதிநிதிகள், உள்ளூ ராட்சி ஊழியர் சங்கங்களின பிரதிநிதிகள், அரச கூட்டுத் தாபன வங்கிகளின் உறுப்பி னர்கள், பல நோக்குக் கூட்டு றவுச் சங்கங்களும், ஏனைய கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்கள், பொதுமுகாமை யாளர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், தனியார் அரச போக்குவரத்து சங்க உறுப்பி னர்கள், சகல மத தாபனங் களின் உறுப்பினர்கள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், புனர்வாழ்வுக் கழகங்கள், திவக மகளிர் நலன் காக்கும் கழக உறுப்பினர்கள், மகளிர் அமைப்புக்களின் உறுப்பினர் கள், மற்றும் ஏனைய சமய சமூக ஸ்தாபனத்தின் பிரதி நிதிகள் நலன் விரும்பிகள் ஆகிய அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## யாழ். பல்கலைக்கழக உதவிநிதியாளரை விடுவிக்க துணைவேந்தர் முயற்சி

கடந்த மாதம் கொழும்பில் கைதான யாழ் பல்கலைக் கழக உதவி நிதியாளர் திரு. எஸ். காந்தமூர்த்தியினை விடு விப்பதுதொடர்பாகபல்கலைக் கழக பதிவாளர் கொழும்பு சென்று பதினைந்து நாட்க ளுக்கு மேல் சென்றபோதும் இதுவரை அவரின் விடுதலை தொடர்பாக எதுவித தகவல் களும் கிடைக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து நேற்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராஜா கொழும்பு பயணமானார். இவரின் விடு தலை தொடர்பாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு விடமும் தேவையேற்படின் உயர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.



‘தமிழோசை’ வீடியோ படத்தில் நடித்த செல்வி இ. சுரேசினியுடன் தேசியத்தலைவர் பிரபாகரன்

# ‘தமிழோசை’ கலைஞர்களுக்கு தலைவர் பரிசு வழங்கி கௌரவம்

‘‘எமது மக்களின் விடுதலை உணர்வையும் போராட்ட வாழ்வையும் ஆழமாக தரி சித்து நிற்கும் அற்புதமான கலைப் படைப்புகளை நாம் உருவாக்க வேண்டும். எமது விடுதலைப் போராட்டம் உலகத்திற்கு ஒரு உன்னத வழிகாட்டியாக அமைந்தது போல, எமது கலாசிருஷ்டிக ளும் உலகத்தோர் பாராட் டும் உயர்தரத்தை எட்ட வேண்டும்.’’

இவ்வாறு தலைவர் பிரபா கரன் நேற்று முன்தினம் ‘தமிழோசை’ வீடியோ படத்தை உருவாக்கிய முல்லை மாவட்ட கலைஞர்கள் மத்தி யில் பேசும் பொழுது குறிப் பிட்டார். நவீன தொழில் நுட்ப வசதிகள் ஏதுமற்ற நிலையிலும், அவலமான போராட்டச் சூழ்நிலையிலும் மக்களின் போராட்ட வாழ்வை அழகாகச் சித்தரிக் கும் தரமான வீடியோ படத்தை உருவாக்கியது குறித்து, இப்படத்தில் இணைந்து பணியாற்றிய அனைத்துக் கலைஞர்களையும் தலைவர் வெகுவாகப் பாராட் டினார்.

‘‘எதிர்பார்த்ததைவிட மிக வும் தரமாகவும், பார்ப்போ ரின் உள்ளத்தைத் தொட்டு போராட்ட உணர்வைத் தூண்டிவிடும் வகையிலும் இந்தக் கலைப்படைப்பு அமைந்திருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் படத்தில் பாத்திரப் பங்கேற்ற சகலரும் மிகவும் தத்ரூபமாக, சிறப்பாக நடித்துள்ளனர். முல்லை மண் ணின் இயற்கை அழகும், வளமும், வாழ்நிலையும் இக் கலைப்படைப்பிற்கு மேலும் மெருகூட்டுகிறது. எமது விடு தலைப் போராட்டத்தின் உன்னதத்தையும், மக்களின் உறுதி தளராத பங்களிப்பை யும் வெளிக்கொண்டுவந்ததில் தமிழோசை வெற்றி கண்டுள் ளது.’’ என்று தலைவர் தொடர்ந்து கூறினார்.

வெறும் வர்த்தக நோக்குடன், எதார்த்த வாழ்விற்கு புறம் பாக, மக்கள் மனதில் விரச மான கருத்துகளை விதைத்து வரும் தென்னிந்திய சினிமா வின் தாக்கங்களிலிருந்து விடு பட்டு புதுமையான பரிசோத னையாக சமூகப் பொறுப்பு ணர்வுடன் சினிமா என்ற ஊடகம் இனி முன்னெடுக்கப் படவேண்டும் எனவும் தலை வர் எடுத்துரைத்தார். முல்லை மாவட்டம் கலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இளாலியில் கொல்லப்பட்ட மேலும் ஆறு பேரின் விபரம்

(யாழ்ப்பாணம்)

இளாலிகடற்பரப்பில்கடந்த இரண்டாம் திகதி பயணிகள் படகுகள் மீது சிறிலங்கா கட ற்படையினர் மேற்கொண்ட கொடூரத் தாக்குதலில் கொல் லப்பட்ட பொதுமக்களின் சில ரது சடலங்கள் நேற்றுக்காலை ஆலங்கேணி நல்லூர்பகுதியில் கரை ஒதுங்கின.

நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய ஒன்பது பேரின் பெயர் விபரங்கள் நேற்றைய ஈழநாதத்தில் வெளியிடப்பட் டது. நேற்று ஒதுங்கிய மேலும் ஆறு சடலங்கள் பற்றிய பெயர் விபரம் வருமாறு

★ சிவலிங்கம் அன்னபூரணம் (கோட்டைக்காடு ஏழாலை)

★ இராசலிங்கம் செல்லத் துரை (புத்தூர் மேற்கு, நவக் கிரி)

★ சின்னையா கனகசபை (பளை)

★ சின்னையா கனகராசா (பளை)

★ நளினி தில்லையம்பல நாதன் (24 வயது) கொக்கு வில்

★ யசோதா செல்லத்துரை (குளப்பிட்டி கொக்குவில்)

## இளாலி கடற்பரப்பில் நேற்றிரவும் மோதல்

(யாழ்ப்பாணம்)

இளாலி கடற்பரப்பில் நேற் றிரவு சிறிலங்கா கடற்படை யினருக்கும் விடுதலைப் புலிக ளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பகுதிக்கு வரமுயன்ற கடற்படையினரை விடுதலைப் புலிகள் தாக்கி விரட்டியடித் ததாகவும் பின்னர் பயணிகள் படகுச்சேவை நடைபெற்ற தாகவும் தெரியவருகிறது.

இதேவேளை சனியிரவு இற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கொழும்பிற்கு அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். மாவட் டத்தில் நடைபெற்ற பரீட்சை விடைத்தாள்கள் திருத்த வேலைக்காக இன்று கொழும் பிற்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளன.

இன்று மேற்படி விடைத் தாள்களுடன் பலாலி, மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இரண்டாம் வருட இறுதிப் பரீட்சை விடைத் தாள்களும் குமண கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்பட வுள்ளது.

## தமிழீழ பொதுக்கல்வி தேர்வு இன்று முடிவுகள் வெளியாகும்

யாழ். மாவட்டத்தில் கட ந்த நவம்பர் மாதம் நடை பெற்ற க. பொ. த (சா/த) முன்னோடிப்பரீட்சை முடிவு கள் இன்று கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

பாடசாலை அதிபர்கள் நாளை தத்தமது கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல் விப்பணிப்பாளர்களிடமிருந்து பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இப்பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் க. பொ. த. உயர்தரவகுப்புக ளுக்கு மாணவர்களுக்கு அனு மதி வழங்கும்படியும் அதிபர் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளது

இதேவேளை இத்தேர்வுப் பெறுபேறுகளின் தரங்களு டன் பெற்ற புள்ளிகளும் வெளியிடப்படவுள்ளன. எனவே மீள்மதிப்பீடு செய் யப்படவேண்டியதில்லை என வும் ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் படிவ இலக்கம், தொ[illegible]பிலக்கம், தேர்வு மண்ட[illegible] இலக்கம் சுட்டெண் என்பவற்றுடன் தமிழீழ

(4 [illegible] பக்கம் பார்க்க)

நூலகம் யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### தேவை

இலுப்பெண்ணெய், இலுப்பைப அரப்புத் தேவை. மாதிரியுடன் தொடர்பு கொள்ளவும். மிக்க்வைதி.
[ெ-5700]

### சத்தியா நகைத் தொழிலகம்

சகலவிதமான நகைத் திருத்த வேலைகளும், ஒட்டு வேலைகளும் உடனுக்குடன் செய்து பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு: 176/5 கஸ்தூரியார் வீதி, (வின்சர் சினிமா முன்பாக) யாழ்நகர்.
[3912]

### சங்கீதம்

வட இலங்கைச் சங்கீதசபை இரண்டாந்தரப் பரீட்சை பாடத் திட்டத்திற்கமைய சங்கீத ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த ''சங்கீதம்-வினா விடை'' அனைவர்க்கும் பயன்படும். எங்கும் கிடைக்கும்.
(3913)

### வெளிவந்துவிட்டது

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு உதவும் தமிழ் ஆண்டு 5 செயல் நூல் வெளிவந்து விட்டது. விரிவான விளக்கங்கள், பயிற்சிகள் கொண்டது. ஆக்கம் த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(3917)

### சித்திரம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சித்திரம் கற்போருக்கும், வட-இலங்கை நுண்கலை மன்றப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் உதவும் சித்திரம் வினா—விடை விற்பனையாகிறது. ஆக்கம்: த. சிவயோகலிங்கம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(3918)

### விற்பனையாகிறது

இலகு ஆங்கிலம் (English Made Easy) ஆண்டு 4, 5, 6 ரூபா 19-50 மாற்றம் மக்கள் சஞ்சிகை ரூபா 10-00. தமிழ்த் தென்றல் — யாதுமூரானின் கவிதைகள் ரூபா 20-00. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.
(3919)

### உடன் தேவை

பாடுநிலா இசைக்குழுவிற்கு ஓர்கன் வாசிப்பதில் நல்ல

# இனப்பிரச்சினை தீர்விற்கு தேசிய அணுகுமுறை தேவை

## - ரணில்

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்குத் தேசிய அணுகுமுறை ஒன்று தேவை. இரண்டு பிரதான கட்சிகளும் தமக்கிடையில் அரசியல் சதுரங்கத்தில் ஈடுபடுவதனால் தீர்வு ஏற்படாது. அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து பேசவேண்டும். பாராளுமன்றத்தினால் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்பது ஜனாதிபதியின் கருத்தாகும் என்று கைத்தொழில் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்துறை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கிரிண்டிவெலவில் கண்காட்சி ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றும் போது கூறினார்.

மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வது நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவே என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து படையினர் வலி. வடக்குப் பகுதிகளை நோக்கி ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8 30 மணி தொடக்கம் நள்ளிரவு வரை மேற்படி பகுதிகளில் இருந்து தாக்குதல் நிகழ்த்தப்பட்ட வண்ணமிருந்தன.

## கொழும்பு செல்ல முடியாமல் நோயாளர்கள் பெரும் அவதி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்தியசாலையில் விசேட சிகிச்சைக்கென செல்ல முடியாமல் பெருமளவு நோயாளர் அவதிப்படுகின்றனர். அவர்கள் நாள்தோறும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அலைந்து திரிகின்றனர் என தெரியவருகின்றது.

புற்றுநோய் போன்ற மிகவும் கொடிய நோயினால் பிடிக்கப்பட்ட நோயாளரே இவ்வாறு அவதிப்படுவதாக தெரிய வருகின்றது.

இம்முறையும் கப்பலில் நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு இதுவரை அனுமதி கிடைக்காமையினால் மேற்படி நோயாளர் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர்.

இவர்கள் நாள்தோறும் யாழ். வைத்தியசாலைக்குச் சென்று அங்கு எப்பொழுது எங்களை கப்பல் மூலம் சிகிச்சைக்கு கொழும்பிற்கு அழைத்துச் செல்வார்கள் என கேட்டவண்ணமிருக்கின்றனர்.

## திருமலை ஆஸ்பத்திரிக்கு காலாவதியான வில்லைகள்

(கொழும்பு)

அனுராதபுர மாவட்ட வைத்தியசாலையில் இருந்து காலாவதியானது எனக்கூறி கொழும்புக்கு அனுப்பப்பட்ட மலேரியா வில்லைகள் திருக்கோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனுராதபுர மாவட்ட வைத்தியசாலையில் இவ்வில்லைகளை உட்கொண்டதினால் பலர் மயக்கம் அடைந்ததைத் தொடர்ந்து இவ் வில்லைகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன இதுசம்பந்தப்பட்ட அதிகாரிபின்னர் அவற்றை திருக்கோணமலைக்கு அனுப்பியதாக தெரியவருகின்றது இங்கும் இவற்றை உட்கொண்ட பலர் மயக்கம் அடைந்துள்ளதாகவும், உடனடியாக இந்த வில்லைகளை மாற்றித் தருமாறும் திருக்கோணமலை மருத்துவ வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## யாழ். வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென வருகின்ற நோயாளர்களுக்கு ஒருநாளைக்குப் போதுமான அளவு மருந்துப் பொருள்களே வழங்கப்படுவதாக தெரிய வருகின்றது

சாதாரண காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு வருகின்ற நோயாளி ஒருவருக்கு மூன்று நாளைக்குப் போதுமான அளவு மருந்துக் குளிசைகள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் தற்பொழுது ஒரு நாளைக்குரிய குளிசைகள் மட்டுமே வழங்கப்படுவதாக தெரியவருகின்றது.

சென்றமுறை கப்பல் மூலம் குறைந்த அளவு மருந்துப் பொருள்களே அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும், இதனால் நிலைமை மேலும் மோசமடையலாம் என அறிய வருகிறது இதற்கிடையே யாழ் வைத்தியசாலையில் சிகிச்சைக்கென வருகின்ற நோயாளரின் எண்ணிக்கையும் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது.

மேலும் நுண்ணுயிர்க்கொல்லி மருந்தான 'அனரிபயற்றிக்ஸ்' என்கின்ற மருந்து கிளினிக், வாட், ஆகிய பகுதிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கே வழங்கப்படுகின்றது இருந்தும் வெளிக்கள நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுபவர்கள் இம்மருந்தினை பெறுவதற்கு வைத்தியசாலை பணிப்பாளரினால் உறுதிப் படுத்தப்பட்ட கடிதம் பெற்றால் மட்டுமே அவர்களுக்கு வழங்கப் படுகின்றதென அறிய வருகின்றது. (பா)

## தலைமைப் பதவிப் போட்டியில் அநுரா முன்னணியில்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவிக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போட்டியில் அநுராவிற்கு பெரு வெற்றி கிடைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திரு. அநுரா பண்டாரநாயக்கா தனது தாயார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய வகையில் கடந்த வாரம் இருபெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளார் இந்த நெருக்கடியிலிருந்து சிறிமா மீளமாட்டார் என நம்பப்படுகிறது.

## அகதிமுகாம்களில் தொழுநோய் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அகதிமுகாம்களில் ஜனவரி மாதத்தில் தொழுநோய் ஆய்வுகளை மேற்கொள்ள சுகாதாரப் பகுதியினர் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்,

சுதுமலை சின்மய பாரதி அகதிமுகாம் வட்டுக்கோட்டை துறட்டிப்பனை அம்மன் கோவிலடி அகதிமுகாம், கூளாவடி அ.மி.த. பாடசாலை அகதிமுகாம், மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதான அகதி முகாம்களில் தொழுநோய் சம்பந்தமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (24)

## இரண்டுமைல் தூரத்திற்குள் மூன்று சோதனைச் சாவடிகள்

### திருமலை கொழும்பு வீதியில் கெடுபிடி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை பிரதான பாதைகளில் தற்போது படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளது. இதனால் அப்பாதை யூடாக பயணம் செய்யும் பயணிகள் மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

இரண்டு மைல் தூரத்தைக் கடப்பதற்கு மூன்று இடங்களில் இறக்கப்பட்டு பொருள்கள் பரிசோதனை செய்யப்படுவதாக ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இப் பரிசோதனை நிலையங்களில் பல தமிழர்கள் கைது செய்யப்படுவதாகவும் அவர்கள் அப்பாவி வியாபாரிகள் என்றும் இவர்களுக்குசார்பாக கதைத்த ஒரு சிங்களவர் அண்மையில் திருக்கோணமலை - கொழும்பு பாதை இரண்டாவது பரிசோதனைச்சாவடியில் தாக்கப்பட்டதாகவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

## இன்று

புனித சூசையப்பர் துறவற சபையின் தலைவரும், கல்விமானுமாகிய அருட்சகோதரர் சி. அ. பிரான்சிஸ் அவர்களின் பன்னிரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு இளாலி புனித மிக்கேல் ஆலயத்தில் இன்று மாலை நான்கு மணிக்குப் பூசை ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

## இழுவைப் படகில் களவு

பருத்தித்துறை இறங்கு துறையில் இழுவைப் படகில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று இனம் தெரியாதவர்களால் நேற்று இரவு களவாடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக காவல் துறையில் புகாரிடப்பட்டுள்ளது. (யோ)


O/L DAY CLASSES
பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம் இன்று 5.1.93 காலை 8.00 மணி
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளச்சந்தி, யாழ். (சி/5699)



விக்னா கல்வி நிறுவனம்


## கண்ணீர் அஞ்சலி

### திரு. சதாசிவம் பாலசுப்பிரமணியம்

எங்கள் கிளையின் அங்கத்தவர் ஆகிய திரு. சதாசிவம் பாலசுப்பிரமணியம் அவர்கள் [உரிமையாளர் சரஸ்வதி பேக்கரி] இளாலியில் இடம்பெற்ற சம்பவத்தில் அகால மரணம் அடைந்துள்ளார். என்பதை அறிந்து மிகுந்த துன்பமும் மனவேதனையும் அடைகின்றோம். இவரது இழப்பினையிட்டு, கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்குஎங்கள் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளையும் சமர்ப்பிக்கின்றோம்.

அங்கத்தவர்கள்
யாழ். மாவட்ட பேக்கரி உ. சங்கம்
தென்மராட்சிக் கிளை

(3925)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-01-05

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - வங்காலை பங்குமனைக்குட் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - பங்குத் தந்தையும், தலைசிறந்த சமூகப் பணியாளரும், இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புற்றோரின் மறுவாழ்விற்காக உழைத்தவருமான - வண. பிதா

மேரி பஸ்ரியன் அடிகளார்

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச் சாவெய்திய -

மூத்தவன் (நாகராசா பதிமநாதன் - வந்தாறுமூலை-

பரீட்சைகளுக்குத் தோற்று வோருக்கும் உதவும் சித்திரம் வினா—விடை விற்பனையாகிறது. ஆக்கம்: த. சிவயோகலிங்கம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3918)

அகதி முகாம்களில் தொழு கப்படவுள்ளது.

இவம் தெரியாதவர்களால் எது. (யோ)

## விற்பனையாகிறது

இலகு ஆங்கிலம் (English Made Easy) ஆண்டு 4, 5, 6 ரூபா 19-50 மாற்றும் மங்கள் சஞ்சிகை ரூபா 10-00. தமிழ்த் தென்றல் — யாதுமூரானின் கவிதைகள் ரூபா 20-00. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (3919)

## உடன் தேவை

பாடுநிலா இசைக்குழுவிற்கு ஓர்கன் வாசிப்பதில் நல்ல தேர்ச்சியுள்ளவர் உடன் தேவை தொடர்பு: 'பாடுநிலா' 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (3922)

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

## சேவைநலம் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்றத்தில் 27 ஆண்டுகள் தொடர்ச்சியாகச் சேவையாற்றியதுமல்லாமல் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 21 வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. க. நடராஜாவிற்கு சேவைநலம் பாராட்டு விழா ஒன்று அண்மையில் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் திரு. வே பொ. பாலசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இப் பாராட்டு விழாவில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி உட்படப் பல இணைந்த தலைவர்கள் பகுதித் தலைமை உத்தியோகத்தர்கள் மற்றும், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் சுகாதாரப் பகுதிஊழியர் கலந்து சிறப்பித்தார்கள்

---

# O/L DAY CLASSES

பகல் நேர வகுப்புக்கள்

ஆரம்பம் இன்று **5.1.93** காலை 8.00 மணி

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளச்சந்தி, யாழ். (சி/5699)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L DAY CLASSES பிரிவு I (8.00 - 2.00)
EVENING " பிரிவு III (3.15 - 6.00)
SAT.SUN " பிரிவு I (8.00 - 3.00)

**பிரிவு :-II 6, 7, 8, 9, 10**

**ஆரம்பம்:- 05.01.93**

மு.கு 6, 7, 8, 9, 10 க்கான பிரிவு III மட்டுமே ஆரம்பிக்கப்படவுள்ளதால் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

★ ஒவ்வொரு பிரிவுகளுக்கும் குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

★ மாணவர்களுக்கு மாதாந்தம் பரீட்சை நடாத்தப்படும்.

★ கணிதம். விஞ்ஞான வகுப்புக்கள் வாரத்தில் நான்கு நாட்கள் நடாத்தப்படும்.

(சி-5667)

---

## எடிசன் அக்கடமி

(யாழ் இந்துக்கல்லூரி அருகில்)
411/1, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆண்டு 9, 10 O/L வரை**
புதிய பிரிவுகள்

| கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|
| பாஸ்கரன், | இரா. செல்வவடிவேல், |
| M. சிறிதரன் | J. J. கொலின்ஸ் |

ஆரம்பம்: 05.01.93 பி.ப. 3.00 மணி (சி-5701)

---

## கண்ணீர் அஞ்சலி

### திரு. சதாசிவம் பாலசுப்பிரமணியம்

எங்கள் கிளையின் அங்கத்தவர் ஆகிய திரு. சதாசிவம் பாலசுப்பிரமணியம் அவர்கள் [உரிமையாளர் சரஸ்வதி பேக்கரி] கிளாலியில் இடம்பெற்ற சம்பவத்தில் அகால மரணம் அடைந்துள்ளார். என்பதை அறிந்து மிகுந்த துன்பமும் மனவேதனையும் அடைகின்றோம். இவரது இழப்பினையிட்டு, கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளையும் சமர்ப்பிக்கின்றோம்.

அங்கத்தவர்கள்
யாழ். மாவட்ட பேக்கரி உ. சங்கம்
தென்மராட்சிக் கிளை

(3925)

---

# கண்ணீர் அஞ்சலி

## திரு. சதாசிவம் பாலசுப்பிரமணியம்

எமது சங்கத்தின் மூத்த உறுப்பினரும், தென்மராட்சிக் கிளையின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வந்தவரும் சரஸ்வதி பேக்கரி உரிமையாளரும் ஆகிய திரு. சதாசிவம் பாலசுப்பிரமணியம் அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். இவரின் மறைவு எமது சங்கத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், நெறியாளர் குழு,
காரியாலய ஊழியர்கள்

**பேக்கரி உரிமையாளர் சங்கம்**

(3924)

---

# நினைவு கூருகின்றோம்...
## 1993-01-05

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - வங்காலை பங்குமனைக்குட் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - பங்குத் தந்தையும், தலைசிறந்த சமூகப் பணியாளரும், இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புற்றோரின் மறுவாழ்விற்காக உழைத்தவருமான - வண. பிதா

மேரி பஸ்ரியன் அடிகளார்

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

மூத்தவன் (நாகராசா பதிமநாதன் - வந்தாறுமூலை- மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் இரண்டாவது நாளாக மேற்கொண்ட தரை, வான் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம். குரும்பசிட்டிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ராஜு (சுபபிரமணியம் கிருஷ்ணகுமார் - குரும்பசிட்டி - யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - நாவற்குடாப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

ஜீவன்

திருக்கோணமலை - மூதூர், ஈச்சிலம்பத்தைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லோரன் (வல்லிபுரம் நடேசபிள்ளை - தாவளை, இயற்றாலை, வரணி - யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - ஜெயந்திபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

தேவா (மரியான் சகாயம் - கல்லடி - மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - இளைஞன் உட்பட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த -

எழுச்சியன் (கனகரத்தினம் சுமனதாசன் - கலைவாணி வீதி, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு - முத்தையன்கட்டு குளத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப் பிரிந்த -

பரமானந்தம் / தாஸ் (சின்னையா புஷ்பராசா - கருப்பட்டை முறிப்பு, மாங்குளம் - முல்லைத்தீவு)
சுகுணன் / அப்பன் (திருநாவுக்கரசு சதீஷ் - கற்சிலைமடு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5703]

அதிர்ஷ்டம் உனக்கு சட்டியைத் தேடித் தரலாம்; ஆனால் சட்டியில் உலை போடுவது உன் உழைப்பைப் பொறுத்ததே.

- ஜான் கே.


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 05- 01- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05


## எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்

கண்டி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் நின்று சிறிலங்காவின் ஜனாதிபதி தர்ம போதனைகள் நிகழ்த்திக் கொண்டிருக்கையில், சிறிலங்கா கடற்படையினர் கிளாலிக் கடற்பரப்பில் அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை புரிந்தனர். படகில் இருப்பவர்கள் பொதுமக்கள் என தெரிந்த பின்னும் மிகவும் மோசமான முறையில் காட்டுமிராண்டித் தனமாக இப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

அதாவது "ஆயுதங்கள் மூலம் சமாதானம் நிலை நாட்டப்பட்டதாக வரலாறு இல்லை. ஆயுதம் மூலம் தீர்வு காண்பதற்குப் பதிலாக பௌத்த மதத்தில் போதிக்கப்பட்டுள்ள அன்பு, பாசம், தார்மீகம், நடுநிலைமை பேணுதல் ஆகியவற்றின் மூலம் தீர்வு காண்பது சாலச் சிறந்தது" என சிறிலங்கா ஜனாதிபதி குறிப்பிட்டு சில மணி நேரத்திற்குள்ளேயே இப்படுகொலைகளைச் சிங்கள இராணுவம் புரிந்துள்ளது.

சிங்கள இராணுவம் தமிழர்களைப் படுகொலைகள் புரிவது இது முதற் தடவையல்ல. சிங்கள இராணுவம் புரிந்த இனப் படுகொலைகளின் பட்டியல் மிகவும் நீளமானதாகும். 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்படுகொலைகள் இன்றும் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. இவற்றுள் இறுதியாக கிளாலிக் கடற்பரப்பில் கடந்த சனியிரவு நிகழ்ந்த தாக்குதலும் ஒன்றாகும்.

இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற ரீதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளும் இனப்படுகொலைகள் ஒருபோதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முடியாது. ஆயுதத்தினால் சமாதானத்தை நிலை நாட்டியதாக வரலாறு இல்லை எனத் திரு. பிரேமதாசா குறிப்பிட்டமை அவரைப் பொறுத்து பேச்சளவினதான விடயமாக இருக்கலாம் அதில் அவர் நம்பிக்கையீனம் உள்ளவராகவும் இருக்கலாம், ஆனால், ஆயுதங்கள் மூலம் சமாதானம் நிலை நாட்டப்பட முடியாது என்பதற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலி...

# உணவுப் பொருள் பெரும் பற்றாக்குறை

# குடாநாட்டில் பஞ்சம் ஏற்படும் ஆபத்து;

## ஜனாதிபதி பிரேமாவிற்கு அரச அதிபர் மகஜர்

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் என்ற வகையில் அம் மாவட்டத்தின் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விடயத்தில் எழுந்துள்ள நெருக்கடி பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். இதனால் பெரும் கவலை அடைந்திருக்கும் நான் விபரமான அறிக்கை யொன்றைத் தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

### உணவுப்பொருள் விநியோகத்தில் நெருக்கடி:

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான உணவுப் பொருள் விநியோகம் பலத்த பாதிப்புக்கும் நெருக்கடிக்கும் உள்ளாகியுள்ளது. உணவுப் பொருள் விநியோகத்தைச் சீராக்குவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டாலன்றி, உணவுப்பொருள் பற்றாக்குறையால் மக்கள் எதிர்நோக்கும் சொல்லொணாத் துயரங்களைத் தவிர்ப்பது இயலாமற் போகும். பின்வரும் நிகழ்வுகளின் காரணமாகவே தற்போதைய நெருக்கடிநிலைதோன்றியுள்ளது

1. குடாநாட்டிற்கான தரைமார்க்கப் போக்குவரத்துகள் அனைத்தும் மூடப்பட்டிருப்பதால் தனியார் வர்த்தகர்கள் அரிசி, மா, சீனி, தேங்காய் எண்ணை போன்ற பொருள்களையும், இதர அத்தியாவசியப் பொருள்களையும் கொண்டுவருவது தடைசெய்யப்பட்டிருக்கின்றது

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் அமர்த்தப்பட்டு கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு உணவுப் பொருள்களை எடுத்து வரும் கப்பல் சேவைகள் குறைக்கப்பட்டுள்ளது பிந்திக் கிடைத்த தகவல்களின்படி பார்த்தால், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினால் அமர்த்தப்பட்டு கொழும்பிலிருந்து வைத்தியசாலைகளுக்கான மருத்துவப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் நோயாளர் போக்குவரத்து. என்பவற்றைக் கவனித்த எம். வி. குமண கப்பல் மட்டும் தான் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான சேவையில் ஈடுபடவிருப்பதாகத் தெரிகிறது. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் அமர்த்தப்பட்ட இரு கப்பல்களும் தொடர்ந்து சேவையில் ஈடுபடுவது பற்றி உறுதியற்ற ஒரு நிலையே காணப்படுகிறது. இந்த இரண்டு கப்பல்களும் சேவையில் ஈடுபட்டு உணவுப்பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வராத இடத்து எம். வி. குமண கப்பல் மூலம் சிறிதளவு உணவுப் பொருள்கள் மட்டுமே யாழ்ப்பாண மாவட்டத்தை வந்தடையும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தேவையான உணவுப்பொருள்கள், ஜூன் 1990க்கு முன்பிருந்த அத்தியாவசிய பொருள்களின் விநியோக நிலைமை, சண்டை ஆரம்பித்தது முதல் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், இப்போதைய அவசர நிலையை சமாளிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றை விபரமாகக் கீழே தருகிறேன்.

### யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களின் மதிப்பீடு

சுமார் 2,20 000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் எட்டு லட்சம் மக்களைக் கொண்டதாக யாழ்ப்பாண மாவட்டம் மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய நுகர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிட்டால் ஒரு மனிதனுக்கு வருட...

அப்பிரிவில் வாழும் மக்களும் இப்போது யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகத்தாலேயே கவனிக்கப்படவேண்டியவர்களாயுள்ளனர்.

எனவே பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களையும் சேர்த்துக் கணிப்பிட்டால் உணவுப் பொருள்களின் தேவை பின்வருமாறு அமையும்:

அரிசி — 82,500 மெ. தொன்
மா — 29,700 மெ. தொன்
சீனி — 18,150 மெ. தொன்
தானிய வகைகள் — 12,375 மெ. தொன்

### 1990 ஜூனுக்கு முன்பான விநியோக நிலைமை

1986ஆம் ஆண்டில் உணவு ஆணையாளரினால் புகையிரதங்கள் மூலமும், கப்பல்கள் மூலமும் பின்வரும் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டிருந்தன.

| பொருள்களின் விபரம் | அளவு | மாவட்டத்தின் மொத்தத் தேவையில் அனுப்பப்பட்ட பொருள்களின் சதவிகிதம் |
| --- | --- | --- |
| அரிசி | 12 454 மெ. தொன் | 15.64 |
| மா | 28,726 மெ. தொன் | 93.8 |
| சீனி | 15,188 மெ. தொன் | 81.2 |

மிகுதியான உணவுப் பொருள்கள் யாவும், தனியார் வர்த்தகர்கள் கொழும்பிலிருந்தும் ஏனைய பிற மாவட்டங்களிலிருந்தும் தரை மார்க்கமாக கொண்டு வரப்பட்டமையினாலேயே மாவட்டத்தின் உணவுத் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வந்தது. மேற்படி உணவுப் பொருள்களைப் பொறுத்தவரை இம்மாவட்டத்தின் உற்பத்தியானது புறக்கணிக்கக் கூடிய வகையில் சிறிதானது என்பது தெரிந்ததே. இம்மாவட்டத்தின் ஆகக் கூடிய உற்பத்தியான 5,400 மெற்றிக் தொன் நெல் என்பது நுகர்வுத் தேவையின் ஆறு சதவிகிதத்தையே கொண்டுள்ளது

> கொழும்பு சென்றுள்ள யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கையளிப்பதற்காக எடுத்துச் சென்ற மகஜரை முழுமையாக இங்கே தருகின்றோம்.

### ஜூன் 1990 க்கு பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

ஜூன் 1990 இல் சண்டை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மாவட்டத்தின் உணவுத் தேவையானது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. தரைவழிப் போக்குவரத்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டமையால் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுவதில் மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டது. அத்தியாவசிய பொருள்களுக்குப் பலத்த கட்டுப்பாடு நிலவியதன் காரணமாக விலைகள் பெருமளவுக்கு உயர்ந்தது. அக்டோபர் 1990 வாக்கில் இவ் விலை உயர்வு மிக மோசமான நிலையை அடைந்து மக்கள் பெரும்...

(3) பல நோக்கு கூட்டுறவு சங்கங்களும், இதர பிற வர்த்தகர்களும் பூநகரி, - சங்குப்பிட்டி பாதையூடாக உணவுப் பொருள்களைக் குறிப்பாக அரிசியை எடுத்து வந்தமை.

(4) யாழ். மாவட்ட விவசாயிகள் காசுப் பயிர்கள் செய்கையில் ஈடுபடுவதற்குப் பதிலாக தானிய உற்பத்தியில் கூடிய ஆர்வம் செலுத்த ஊக்குவிக்கப்பட்டமை

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அனுப்பப்பட்ட பொருள்கள் பங்கீட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கே முன்னுரிமை.

அத்தியாவசிய தேவைகள் ஆணையாளரால் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களில் பெரும் பகுதி நிவாரணம் வழங்கப்படுதலுக்காகவே பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும், மாணவர்களின் மதிய உணவுக்கான உணவுப் பொருள்களுக்காகவும், உணவு முத்திரை வைத்திருப்போருக்காகவும் இவ் உணவுப்பொருள்கள் பங்கீடு செய்யப்பட்டன.

இந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது போக மிகுதியான பொருள்களே கூட்டுறவு சங்கங்களின் ஊடாக பொது மக்களுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்யப்பட்டது. இத்தகைய விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் தாமதமின்றியே அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுவந்தது. இவ்வகையில் 1992-ம் ஆண்டில் மட்டும் ரூபா 505 மில்லியன் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

உணவு முத்திரை மற்றும் மாணவர் மதிய உணவு முத்திரை என்பவற்றிற்காக மட்டும் மாதாந்தம் தேவைப்படும் தொகை பின்வருமாறு அமைகிறது. உணவு முத்திரை 17 மில்லியன், மதிய உணவு முத்திரை - 8.5 மில்லியன்.

### தற்போதைய நிலைபரம்:

1990 ஜூனுக்குப் பின்னர் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையானது கணிசமான அளவுக்கு உயர்வடைந்தது. தற்போது சுமார் 80,271 குடும்பங்கள் இடம்பெயர்ந்த நிலையில் உள்ளன. இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் மூன்றிலொரு பங்கு என்பது குறிப்பிடத்தக்கது. இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு பின்வரும் அடிப்படையில் உணவளிப்பதற்காக மட்டும் மாதாந்தம் 68 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட இலவச நிவாரணத்தின் அடிப்படையில் கணிப்பிடும் போது அரிசி1000 மெ. தொன்னும், கோதுமை மா 1100 மெ. தொன்னும், சீனி 350 மெ. தொன்னும், தானியவகைகள் 88மெ. தொன்னும் பால்மா வகைகள் 61000 பக்கட்டுகளும், பிற பொருள்கள் 10 மெ. தொன்னும் தேவைப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களின் இப்போதைய உணவுப் பொருள் இருப்பு நிலையைக் கணிப்பிட்டால் அது 600 மெ. தொன் என ஆகிறது. தனியார் வர்த்தகர்களிடமான கையிருப்பு நிலைமை புறக்கணிக்கக்கூடிய அளவுக்கு சிறிதாகும், எனவே இம் மாவட்டத்தின் உணவுப் பொருள் இருப்பு நிலையானது ஆகக் குறைந்த அளவுக்கு படியிறங்கிப் போயிருப்பதால் நிலைமை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இந்த நிலைமைக்கான காரணங்கள் முன்பக்கத்திலேயே தரப்பட்டுள்ளதா...

சிங்கள இராணுவம் தமிழர்களைப் படுகொலைகள் புரிவது இது முதற் தடவையல்ல. சிங்கள இராணுவம் புரிந்த இனப் படுகொலைகளின் பட்டியல் மிகவும் நீளமானதாகும். 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்படுகொலைகள் இன்றும் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. இவற்றுள் இறுதியாக கிளாலிக் கடற்பரப்பில் கடந்த சனியிரவு நிகழ்ந்த தாக்குதலும் ஒன்றாகும்.

இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற ரீதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளும் இனப்படுகொலைகள் ஒருபோதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முடியாது. ஆயுதத்தினால் சமாதானத்தை நிலை நாட்டியதாக வரலாறு இல்லை எனத் திரு. பிரேமதாசா குறிப்பிட்டமை அவரைப் பொறுத்து பேச்சளவினதான விடயமாக இருக்கலாம் அதில் அவர் நம்பிக்கையீனம் உள்ளவராகவும் இருக்கலாம், ஆனால், ஆயுதங்கள் மூலம் சமாதானம் நிலை நாட்டப்பட முடியாது என்பதற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வரலாற்றுக் காலத்தில் இருந்து இன்று வரை பல உதாரணங்களைக் காட்டலாம்.

திரு. பிரேமதாசா இதனைப் புரிந்துகொள்ள இலங்கையின் வரலாறே போதுமானது ஆகும். இலங்கையில், தமிழர் மீது சிங்களப் பேரினவாதம் தொடர்ச்சியாக விளைவித்த படுகொலைகளும், அடக்குமுறையும் இன்றைய ஆயுதப் போராட்டத்திற்கு வித்திட்டதே ஒழிய, தமிழர் மேற்கொள்ளும் ஆயுதப் போராட்டத்தின் விளைவால் தமிழர் மீதான இனப்படுகொலைகள் ஏற்பட்டவையல்ல. இந்நிலையில் தொடர்ந்தும் இனப்படுகொலைகளைச் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்வது மேலும் மேலும் இனப் பிரச்சினையை தீவிரமாக்கி, ஆயுதப்போராட்டத்தை வளர்த்துச் செல்லுமே ஒழிய ஒரு போதும், இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடவோ அன்றி, அடக்கிவிடவோ முடியாது.

இதேவேளை, தமிழ்மக்கள் மீது, சிறிலங்கா ஆயுதப்படைகள் புரியும் படுகொலைகள் இன்று உலகத்தின் கண்களுக்குத் தெரிவதாகவும்இல்லை. அண்மைக் காலத்தில் சிறிதுசிறிதாக தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து எவரும் கவனம்செலுத்துதாகஇல்லைஇன்று உலகில் பேசப்படும் மனித தேயமும், மனித உரிமைகளும் அரசியல் லாபம் தேடும் விவகாரங்களாகவே மாறிவிட்டன. உலகின் கண்ணில் இன்று இனம், நிறம், மொழி, மதம் என்பனவற்றிற்கு ஏற்ப மனித நேயம், மனித உரிமைகள் என்பனவற்றின் அளவும் பருமனும் மாறியுள்ளதாகவே தெரிகின்றது.

இந்நிலையில், இனப்படுகொலையில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளும் பொறுப்பு முழுமையாக தமிழினத்திடமே உள்ளது. இனப்படுகொலையில் இருந்து தப்பித்துக் கொள்ளுதல் என்பது எவ்வளவு விரைவில் தமது பாதுகாப்பான வாழ்க்கையை தமிழினம் உறுதிப்படுத்துகின்றது என்பதைப் பொறுத்தது. ஆகையினால் எவ்வளவு விரைவில் தமிழீழப் போராட்டம் வெற்றி கொள்ளப்படுகின்றதோ அந்தளவிற்கு இனப்படுகொலையும் கட்டுப்படுத்தப்படும். இது தமிழர் எந்தளவிற்குப் போராட்டத்தில் நேரடியாக இணைந்து கொள்கின்றார்களோ அதனைப் பொறுத்தே தீர்மானிக்கப்படக்கூடியதாகும்.

சேவையில் ஈடுபடுவது பற்றி உறுதியற்ற ஒரு நிலையே காணப்படுகிறது. இந்த இரண்டு கப்பல்களும் சேவையில் ஈடுபட்டு உணவுப்பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வராத இடத்து எம். வி. குமண கப்பல் மூலம் சிறிதளவு உணவுப் பொருள்கள் மட்டுமே யாழ்ப்பாண மாவட்டத்தை வந்தடையும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தேவையான உணவுப்பொருள்கள், ஜூன் 1990க்கு முன்பிருந்த அத்தியாவசிய பொருள்களின் விநியோக நிலைமை, சண்டை ஆரம்பித்தது முதல் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், இப்போதைய அவசர நிலையை சமாளிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றை விபரமாகக் கீழே தருகிறேன்.

### யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களின் மதிப்பீடு

சுமார் 2.20 000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் எட்டு லட்சம் மக்களைக் கொண்டதாக யாழ்ப்பாண மாவட்டம் மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய நுகர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிட்டால் ஒரு மனிதனுக்கு வருடமொன்றிற்கு கிடைக்க வேண்டிய உணவுப்பொருள்களின் விபரம் பின்வருமாறு அமையும் அரிசி- நூறுகிலோ, கோதுமை மா முப்பதிதாறு கிலோ சீனி இருபத்திரண்டு கிலோ, தானிய வகைகள் பன்னிரண்டு கிலோ.

இந்த நுகர்ச்சி விகிதத்தின்படி பார்த்தால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருடமொன்றிற்கு எண்பதாயிரம் மெற்றிக்தொன் அரிசியும், இருபத்தெட்டாயிரம் மெற்றிக்தொன் கோதுமை மாவும், பதினேழாயிரத்து அறுநூறு மெற்றிக் தொன் சீனியும், பன்னிரண்டாயிரம் மெற்றிக் தொன் கனிபபொருள்களும் தேவைப்படும். கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்ததும், சுமார் இருபத்தையாயிரம் பேர் சனத்தொகையைக் கொண்டதுமான பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆனையிறவு இராணுவ முகாமின் அமைவிடத்தின் காரணமாக துண்டிக்கப்பட்டிருப்பதால்,

தருகின்றோம்.

பொறுத்தவரை இம்மாவட்டத்தின் உற்பத்தியானது புறக்கணிக்கக் கூடிய வகையில் சிறிதானது என்பது தெரிந்ததே. இம்மாவட்டத்தின் ஆகக் கூடிய உற்பத்தியான 5,400 மெற்றிக் தொன் நெல் என்பது நுகர்வுத் தேவையின் ஆறு சதவிகிதத்தையே கொண்டுள்ளது

### ஜூன் 1990 க்கு பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

ஜூன் 1990 இல் சண்டை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மாவட்டத்தின் உணவுத் தேவையானது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. தரைவழிப் போக்குவரத்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டமையால் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுவதில் மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டது. அத்தியாவசிய பொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவியதன் காரணமாக விலைகள் பெருமளவுக்கு உயர்ந்தது. அக்டோபர் 1990 வாக்கில் இவ் விலை உயர்வு மிக மோசமான நிலையை அடைந்து மக்கள் பெரும் பாதிப்புக்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் வறுமைப்பட்ட பல குடும்பங்கள் பனம்பழத்தைச் சாப்பிட்டு தமது பசியை போக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகினர். ஆனால் பின்வரும் வழிகள் மூலம் குடாநாட்டுக்குள் உணவுப் பொருள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதையடுத்து நிலைமை ஓரளவு மாறியது.

(1) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டமை.

(2) குடாநாட்டிற்கான பிரதான போக்குவரத்துப் பாதையாகிய ஆனையிறவு பாதை மூடப்பட்டதையடுத்து கொம்படி ஊரியான் பாதையூடாக வியாபாரிகள் பெருமளவில் உணவுப் பொருள்களை எடுத்து வந்தமை.

கையில் மூன்றிலொரு பங்கு என்பது குறிப்பிடத்தக்கது. இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு பின்வரும் அடிப்படையில் உணவளிப்பதற்காக மட்டும் மாதாந்தம் 68 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட இலவச நிவாரணத்தின் அடிப்படையில் கணிப்பிடும் போது அரிசி1000 மெ. தொன்னும், கோதுமை மா 1100 மெ. தொன்னும், சீனி 350 மெ. தொன்னும், தானியவகைகள் 88மெ. தொன்னும் பால்மா வகைகள் 61000 பக்கட்டுகளும், பிற பொருள்கள் 10 மெ. தொன்னும் தேவைப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களின் இப்போதைய உணவுப் பொருள் இருப்பு நிலையைக் கணிப்பிட்டால் அது 600 மெ. தொன் என ஆகிறது. தனியார் வர்த்தகர்களிடமான கையிருப்பு நிலைமை புறக்கணிக்கக்கூடிய அளவுக்கு சிறிதாகும், எனவே இம் மாவட்டத்தின் உணவுப் பொருள் இருப்பு நிலையானது ஆகக் குறைந்த அளவுக்கு படியிறங்கிப் போயிருப்பதால் நிலைமை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இந்த நிலைமைக்கான காரணங்கள் முன்பக்கத்திலேயே தரப்பட்டுள்ளதாயினும் சுருக்கமாக நோக்கினால்

1. குடாநாட்டிற்கான தரைமார்க்க போக்குவரத்துப் பாதைகள் யாவும் துண்டிக்கப்பட்டிருப்பதால் உணவுப் பொருள்கள் எடுத்துவர முடியாத நிலைமை.

2. கொழும்பிலிருந்து மாதாந்தம் மூன்று என அனுப்பப்பட்ட கப்பல்கள் ஒன்றாகக் குறைக்கப்பட்டமை என ஆகின்றது.

எனவே தான் மாவட்ட நிர்வாகம் எதிர் நோக்கும் இந்த நிலைமை இவ்வாறு சிறிது காலம் நீடிக்குமானால் பசிக் கொடுமை நேரும் அளவுக்கு செல்வதை தவிர்க்கமுடியாது ஆகவேதான் மாட்சிமைக்குரிய தங்களிடம் உணவுக்கப்பல்களின் வருகையை அதிகரிக்க வேண்டுமென்றும் ஆகக் குறைந்தது மாதாந்தம் மூன்று கப்பல்களையாவது அனுப்பி வைக்கவேண்டுமென்றும் இத்தால் கோரி நிற்கிறேன்.

---

# பழனியில் அ.தி.மு.க ஆதரவில் காங்கிரஸ் போட்டியிடும்

(சென்னை)

பழனிமக்களவைதொகுதிக்கு நடக்கஇருக்கும் இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அ. தி மு. க ஆதரவில்போட்டியிடும் என தமிழ் நாட்டு காங்கிரஸ்கட்சிதலைவர் வாழப்பாடி இராமமூர்த்திதெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி இதற்குப்பதிலாக ராணிப்பேட்டை சட்டப்பேரவைக்கு நடக்க இருக்கும் தேர்தலில் அ.இ தி.மு.க.வை ஆதரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் வகுப்புவாத சக்திகளின் அச்சுறுத்தல் இருக்கையில் இந்திரா காங்கிரஸ் -- அ.இ.அ.தி மு க. கழகக்கூட்டணி அவசியமே எனக் குறிப்பிட்ட ராமமூர்த்தி இந்தக் கூட்டணி நீடிக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

## அ. தி. மு. க - காங்கிரஸ் உறவு நீடிக்கின்றது

- நெடுஞ்செழியன்

(சென்னை)

அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திரா காங்கிரசுக்கும் இடையிலான உறவு தொடர்ந்து நீடிக்கிறது என்றும். இதை இரு கட்சிகளின் மேலிடத் தலைவர்களும் உறுதி செய்துள்ளனர் என்றும் தமிழக நிதி அமைச்சர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

அ. இ. அ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், பாரதீய ஜனதாக் கட்சிகளுக்குமிடையே இரகசியத் தொடர்பு இருப்பதாக தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தேர்தலுக்கான பார்வையாளர் மோதிலால் ஓரா தெரிவித்த கருத்துக்குமறுப்புத்தெரிவித்த நெடுஞ்செழியன், நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இரு கட்சிகளுக்கும் இடையில் அப்படிப்பட்ட தொடர்பு எதுவும் இல்லை என்றார்.

## வாக்காளர் பதிவு

(சென்னை)

தமிழக அரசு வாக்காளர் பட்டியலைச் சரிபார்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

ஜனவரி முதலாம் திகதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலைச் சரிபார்க்க ஒத்துழைப்புக் கொடுக்கும்படி தமிழக அரசு அரசியல் கட்சிகளையும், பொதுமக்களையும் கேட்டுள்ளது.

## ஜனதாதள் 'ஏ' பிரிவு எவருடனும் கூட்டுசேராது

(டில்லி)

ஜனதாதள் ஏ பிரிவு எந்த ஒரு கட்சியுடனும் கூட்டுச்சேர மாட்டாது என அதன் தலைவர் அர்ஜித்சிங் கூறினார்.

டில்லியில் நேற்று மேற்படி கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம்நடைபெற்றது இதன் முடிவில் செய்தியாளர் மத்தியில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் தமதுகட்சி எந்த ஒரு கட்சியுடனும் சேர்வதற்கு வாய்ப்பே இல்லை எனவும் கட்சியின் தனித்தன்மையை பராமரிப்பதுஎன செயற்குழு ஒருமனதாக முடிவுசெய்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் வகுப்புவாத சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் மதசார்பற்ற சக்திகளுடன் ஒத்துழைக்க அக்கட்சி முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்தார்,

அயோத்தியா தாவா முழுவதும் அரசியல் சட்டத்தின் ஒரு பிரிவின் கீழ் சுப்ரீம்கோட்டின் முடிவிற்கு விடவேண்டும் என்றும் அக்கட்சி கோரியுள்ளது.

## 'யுனிசெப்' அதிகாரி சோமாலியாவில் கொலை

(மொகாடிஸ்யூ)

சோமாலியா வில் ஐக்கியநாடுகள் குழந்தைகள் நலநிதியமான யுனிசெப்பின் அதிகாரி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு இலக்காகி மரணம் அடைந்துள்ளார். அயர்லாந்தைச் சேர்ந்தவரான இவ் அதிகாரி தமது அலுவலகத்திலிருந்து இல்லம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் பின் தலையில் தோட்டா தாக்கியதில் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

ஈழநாதம்

# சுதந்திரக் கட்சியினரின் பாதயாத்திரை கைவிடப்பட்டது

(கொழும்பு)

ஆலோசனைக் கூட்டத்தில் நடைபெற்ற அமளிதுமளியைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சியின் பாதயாத்திரை கைவிடப்பட்டதாக தெரியவருகிறது.

முன்னாள் சிறிலங்கா பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் 94-வது பிறந்த தினத்தை முன்னிட்டு எதிர்வரும் வியாழக்கிழமை பொரளையிலிருந்து கொழும்பு காலிமுகத்திடலை நோக்கி பாதயாத்திரை ஒன்றை நடத்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்திருந்தது தெரிந்ததே.

தற்போது அந்த பாதயாத்திரை திட்டத்தை கைவிட கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. இப்பாதயாத்திரைக்குப் பதிலாக வெள்ளிக்கிழமை காலிமுகத்திடலில் உள்ள அமரர் பண்டாரநாயக்காவின் உருவச்சிலைக்கு முன்பாகஒருவைபவமும்கொட கொலன்ல மகாசங்கத்தினருக்கு தானம் வழங்கும் வைபவமும் நடைபெற உள்ளதாக அறியவருகிறது.

கொடகொலவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொத்தளம் என வர்ணிக்கப்படும் கொடகொலவில் நடைபெற்ற கூட்டத்தின்போது கட்சியின் முக்கிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளருக்கும் அவரது சகோதரி சந்திரிகா குமாரணதுங்காவின் ஆதரவாளர்களுக்குமிடையே மூண்ட மோதல்களினால் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. இதன்போது அநுராவும் சந்திரிகாவும் ஒருவரை ஒருவர் தாக்க முயற்சித்ததாகவும் பரஸ்பரம் குற்றம் சாட்டியுள்ளனர்.

## கிராமசேவையாளர் கலந்துரையாடல் நிகழ்ச்சி

உதவி அரச அதிபர்களின் நிர்வாகப் பிரிவுகளுக்குட்பட்ட கிராமசேவையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடைபெறும். எனவே, இதில் அவ்வப் பகுதி நிர்வாகப் பிரிவுகளுக்குட்பட்ட சகல கிராமசேவையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகம் கேட்டுக்கொள்கிறது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்கு அதே அலுவலகத்தில் மு ப. 10 00மணி

தீவகம் (வேலணை, ஊர்காவற்றுறை உ. அ. அதிபர்கள் பிரிவு) முழுவதும் யாழ். செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நண்பகல் 12.00மணி.

## அமரர் ஞானப்பிரகாசம் நினைவுமலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினதும் யாழ். மாவட்ட உளர்வலய அபிவிருத்தி மன்றத்தினதும் ஸ்தாபகராகிய அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் நினைவுமலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட உளர்வலய அபிவிருத்தி மன்றம் நடாத்தும் இவ் விழாவின் நினைவு மலரின் முதற்பிரதியை அமரரின் தாயார் திருமதி நாகரத்தினம் சண்முகம் அவர்கள் பெற்றுக்கொள்வார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## நிவாரண அட்டை மீளாய்வு

[கொழும்புத்துறை]

தொல்புரம் மத்திய சனசமூக நிலையம் வாசிகசாலையில் இன்று காலை 9 மணிக்கு கடற்றொழிலாளர்களுக்கான நிவாரண அட்டைகள் மீளாய்வு செய்யப்படுமெனவும் சகல கடற்றொழிலாளர்களும் தங்கள் நிவாரண அட்டைகளைச் சமர்ப்பிக்குமாறு தொல்புரம் மேற்கு கிராம சேவையாளர் திரு. எஸ் ரஞ்சன் அறிவித்துள்ளார். [24]

# தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறிய வசதிபடைத்தோர் (சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களும்) பின்வரும் நேர அட்டவணையின்படி தமது மீட்புநிதி கடனை நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் செலுத்தலாம் என தமிழீழ மீட்புநிதி பொறுப்பாளர் வெற்றிஅரசன் தெரிவித்துள்ளார்.

07 - 01 - 1993 — வியாழக்கிழமை
08 - 01 - 1993 — வெள்ளிக்கிழமை மாலை 3. 00—3. 30
09 - 01 - 1993 — சனிக்கிழமை
10 - 01 - 1993 — ஞாயிற்றுக்கிழமை காலை 9. 00—10. 00

# "விழித்தெழுவோம்" ஒலிநாடாநாளை வெளியீடு

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி உருவாக்கிய "விழித்தெழுவோம்" பாடல் ஒலிப்பதிவு நாடா நாளை மாலை 4.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தமிழீழ மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஜெயா வினால் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். மாவட்ட தளபதி செல்வராஜா, மங்கள விளக்கேற்றுவார். வரவேற்புரையை செல்வி தமிழவளும், வெளியீட்டுரையை செல்வி மலைமகளும். சிறப்புரைகளை செல்வி ஜெஸனி கவிஞர் மு வே. யோ. வாஞ்சிநாதன். பா. நடேசன் ஆகியோரும். மதிப்புரைகளை திருமதி கோகிலா மகேந்திரன். திருமதி க. சிதம்பரநாதன். திரு. க. சொக்கலிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனா கலைஞர்களை கௌரவிப்பார்.

# சைக்கிள் திருடர்கள் காவல் துறையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல சைக்கிள் திருட்டுக்களில் ஈடுபட்ட பல திருடர்கள் தமிழீழக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்கள் தெரிவித்தார்.

கடந்த பல மாதங்களாக யாழ் மாவட்டத்தின் பல பாகங்களிலும் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வந்தது தெரிந்ததே.

இத்திருட்டில் ஈடுபடும் கோஷ்டியினரைத் தேடித் தமிழீழக்காவல் துறையினர் நடாத்திய வேட்டையில் பல திருடர்கள் அகப்பட்டனர். சாவகச்சேரி, பருத்தித்துறை. யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த திருடர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து திருடப்பட்ட முப்பதிற்கு மேற்பட்ட சைக்கிள்கள் காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது. இதுவரை சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் யாழ் செயலக பழைய பூங்காவிற்கு அருகிலுள்ள மக்கள் தொடர்பகத்தில் தொடர்பு கொள்ளுமாறு பொறுப்பாளர் திரு. நடேசன் கேட்டுள்ளார்.

## மாகாணசபை தேர்தல்

(கொழும்பு)

சிறிலங்காவில் மாகாண சபைத்தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை மாத பிற்பகுதியில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அப்பியாச கொப்பிகள் பெரும் தட்டுப்பாடு

(குருநகர்)

பாடசாலைகள் நேற்று ஆரம்பமானதை அடுத்து குடாநாட்டு புத்தகசாலைகளில் பாடசாலை உபகரணங்களை வாங்குவதற்காக மக்கள் பெருமளவில் படையெடுத்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

அதேவேளை அப்பியாசப் புத்தகங்களுக்குத் தட்டுப்பாடு முன்னர் எப்போதும் இருந்திராத அளவுக்கு ஏற்பட்டிருந்தது

தேவைகளுக்கான அப்பியாசப் புத்தகங்களை வாங்க முடியாமலும். கிடைத்தவற்றை அதிக விலைகொடுத்தும் வாங்கிக் கொண்டு மாணவர்களும். பெற்றோரும் திரும்ப நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

தமிழோசை

பணியில் முன்நின்று எமது பண்பாட்டு வாழ்வு சிதைவுறாது பாதுகாத்து வருவதையிட்டும் தலைவர் பாராட்டுத் தெரிவித்தார்.

தமிழோசை வீடியோ படத்தின் இயக்குனர் திரு. பொ. தாசன், முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. சங்கர், மூத்த உறுப்பினர் திரு. தேவர் ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

இதனையடுத்து தலைவர் தமிழோசை கலைஞர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

தலைவரிடமிருந்து பரிசு பெற்ற கலைஞர்களின் விபரம் வருமாறு:

### நடிகைகள்

செல்விஇ சுரேஜினி. திருமதி தி. கமலாம்பிகை, திருமதி ம. தவமணிதேவி, செல்வி கு. இதயராணி, செல்வி அ சகுந்தலா, செல்வி அ. மாங்கனி, திருமதி சந்திரா, செல்வி மதி, செல்வி ஜெயந்திமாலா.

### நடிகர்கள்

இ. தவராசா, இ. சந்திரரூபன், ச. கந்தசாமி, வே. கோபி, ச. ஜேசுதாஸ். ந. சிவபாதம், அ. அழகேஸ்வரன், செ. அறிவழகன், த. திருச்செல்வம், ச. மோகனதாஸ், திரு. அருளம்பலம் திரு எஸ். பி. செல்வன் (கவிஞரும் உதவி இசைஅமைப்பாளரும்)

பின்னணி இசைக்

## 1-ம் ஆண்டுநினைவலைகள்

தாயின் மடியில் 10 | 04 | 1976



தாயக மண்ணில் 05 | 01 | 1992

### வீரவேங்கை எழிச்சியன்

கனகரத்தினம் கமலதாசன் (கண்ணன்)

ஆண்டுத்திதி: 05. 01. 1993இல்

தாயின் மடியில் தவழ்ந்த போது - உன்
பூமுகம் பார்த்து மகிழ்ந்தோம்

பாடசாலை

சபைகள் மூலமாக வசூலிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கணிசமான பணத்தை இந்த ஸ்தாபனங்கள் கட்டாயப்படுத்திக் கேட்பதால் வருமானம் குறைந்த பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி பெற முடியாமல் இருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து புதிய பாடசாலைகளில் அனுமதி கோரும் மாணவர்களிடமும் அரச பாடசாலை அதிபர்கள் நன்கொடைப் பணத்துக்கு வற்புறுத்துகிறார்களாம்.

பாதிப்புக்குள்ளாகி இடம் பெயர்ந்து உள்ள பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சையில் தகைமை பெற்றும் இந்த நன்கொடைப் பணத்தைச் செலுத்த முடியாத நிலையில் அனுமதி பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும்

## பெற்றுக் கொள்ளவும்

ஆடியபாதம் வீதி (மருத்துவக் கல்லூரிக்கு முன்னால்) திருநெல்வேலியில் திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

* * *

பூநகரி ஆலங்கேணிப் பகுதியில் பயணிகளினால்தவறவிடப்பட்ட கணபதிப்பிள்ளைசெல்லம்மா (திருகோணமலை — 2777990378 V, கணபதிப்பிள்ளை செல்லப்பா (திருக்கோணமலை—183250116 V) ஆகிய இருவரினது அடையாள அட்டைகளும் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

நடைமுறையில் இருப்பது இலவசக் கல்விதானா என்று

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை முருகேசு கணபதிப்பிள்ளை

[காரைநகர்]

காரைநகர் களபூமி வலுப்போடையை பிறப்பிடமாகவும், அம்பலவாணர் வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை முருகேசு கணபதிப் பிள்ளைகாலமானார்.

காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் முருகேசு காசுபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், வசந்தகுலநாயகி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன் (K. K K.), தனபாலசுந்

தாயின் மடியில்

10 | 04 | 1976



தாயக மண்ணில்

05 | 01 | 1992

## வீரவேங்கை எழிச்சியன்

### கனகரத்தினம் கமலதாசன் (கண்ணன்)

ஆண்டுத்திதி: 05. 01. 1993இல்

தாயின் மடியில் தவழ்ந்த போது - உன்
பூமுகம் பார்த்து மகிழ்ந்தோம்
தாயக விடிவில் உயிர்த்த போது
தெய்வமெனப் போற்றுகிறோம்.

உற்றார், உறவினர், இயக்க நண்பர்களை மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி,
உறவினர்கள், நண்பர்கள்.

பத்மாவதி வீதி,
சித்தன்கேணி.

(3915)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:

15 | 10 | 1967



மறைவு:

05 | 01 | 1988

### சுதன்

### (குலசேகரம் சுந்தரேஸ்வரன்)

5-ஆம் ஆண்டு நிறைவெய்தியும்
உன் சிந்தனைகள் எம்மை விட்டு நீங்கவில்லை
வீரமே உயிர் என்பாய்!
வெற்றியே மானம் என்பாய்!
பகைவர்க்குப் புலியாவேன்!
என்றெல்லாம் வீரச்சொல் புரிந்தாயே!
உன்னைக் கயவர் கூட்டம் கருவறுத்ததோ;
அயல் நாட்டுச் சிப்பாய் கையில் சிக்கினையோ!
கார் மேகம் போல் எமது இதயம்!
இருள் சூழ்ந்ததோ!

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி.

அன்புத்தந்தை, சகோதரிகள்

[3905]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதப்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஸ்தாபனங்கள் கட்டாயப் படுத்திக் கேட்பதால் வருமானம் குறைந்த பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி பெற முடியாமல் இருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து புதிய பாடசாலைகளில் அனுமதி கோரும் மாணவர்களிடமும் அரச பாடசாலை அதிபர்கள் நன்கொடைப் பணத்துக்கு வற்புறுத்துகிறார்களாம்.

பாதிப்புக்குள்ளாகி இடம் பெயர்ந்து உள்ள பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சையில் தகைமை பெற்றும் இந்த நன்கொடைப் பணத்தைச் செலுத்த முடியாத நிலையில் அனுமதி பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது இப்போது யாழ். குடாநாட்டில் நடைமுறையில் இருப்பது இலவசக் கல்விதானா என்று பலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (17)

வக் கல்லூரிக்கு முன்னால்) திருநெல்வேலியில் இறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

* * *

பூநகரி ஆலங்கேணிப் பகுதியில் பயணிகளினால் தவறவிடப்பட்ட கணபதிப்பிள்ளைசெல்லம்மா (திருகோணமலை — 2777990378 V, கணபதிப்பிள்ளை செல்லப்பா (திருகோணமலை—183250116 V) ஆகிய இருவரினது அடையாள அட்டைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## தனியார் கல்விநிறுவன ஒன்றியம்

### யாழ்மாவட்டம்

## முக்கிய அறிவித்தல்

1. வருகின்ற சனிக்கிழமை பாடசாலை விடுமுறை தினமாதலால் வெள்ளி 08-01-93 (போயா தினம்) சகல கல்வி நிறுவனங்களும் வழமைபோல மூடிவிடுமாறும்,

2. 95 A/L பிரிவு வகுப்புக்கள் எமது பொதுத் தீர்மானத்திற்கு அமைவாக பொதுப் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரை ஆரம்பிக்க வேண்டாம் எனவும், அவர்களை வேறுபிரிவுகளில் சேர்த்துக்கொள்வது ஒன்றிய விதிகளுக்கு முரணானது எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

[3928] பொதுச்செயலாளர்

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 04.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7516

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-9676, 28-0854, 26-5244, 40-1320, 26-2972, 40-2394, 41-8629, 28-4255, 24-1040, 27-4162, 40-2573, 27-6821, 24 6336, 27-8155, 26-2786, 24-6844, 24 7375, 24-1127, 27-7711, 28-6020, 28-8952, 28-6853, 26-1690, 26-3017, 28-1730, 40-1079, 28-9449, 26-9658, 24-8079

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

27-8283, 42 2151, 24-5258, 24-8484, 28-9917, 41-9855, 24-0576, 24-8429, 26-5850, 24-0192, 24-6475, 40-4429, 24-1259, 26-0375, 26-1321, 27-9719, 24-5137

டுக்கள் அதிகரித்து வந்தது தெரிந்ததே.

இத்திருட்டில் ஈடுபடும் கோஷ்டியினரைத் தேடித் தமிழீழக்காவல் துறையினர் லக பழைய பூங்காவிற்கு அருகிலுள்ள மக்கள் தொடர்பகத்தில் தொடர்பு கொள்ளுமாறு பொறுப்பாளர் திரு. நடேசன் கேட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை முருகேசு கணபதிப்பிள்ளை

### [காரைநகர்]

காரைநகர் களபூமி வலுப்போலையை பிறப்பிடமாகவும், அம்பலவாணர் வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை முருகேசு கணபதிப்பிள்ளைகாலமானார்.

காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் முருகேசு கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், வசந்தகுலநாயகி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன் (K. K K.), ஞானபால சுந்தரம் (சென்றல் ஏச்சன்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலசிங்கம் (அரசாங்க ஒப்பந்தக்காரர்), காலஞ்சென்ற கந்தையா (தபால் அதிகாரி), அபிராமிப்பிள்ளை சபாரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று 05-01-1993 செவ்வாய்க்கிழமை நம்பர் 54, அம்பலவாணர்வீதி. அத்தியடி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைகள் இன்று பிற்பகல் 2 00 மணியளவில் கோம்பையன்மணல்மயானத்தில்நடைபெறும் என்பதனை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

NO - 54,
அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி. பாலசிங்கம்

( 3929 )

### இராசசிங்கம் செல்லத்துரை

நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்தடியைச்சேர்ந்த இராசசிங்கம் செல்லத்துரை 2-1-93 அன்று கிளாலியில் அகால மரணமடைந்துள்ளார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நவக்கிரி,
புத்தூர்.

(3930)

தகவல்:
உதயன்
(பேறாமகன்)

### செல்லையா சுப்பிரமணியம்

### ( இளைப்பாறிய பொலிஸ் சாரதி )

கொடிகாமத்தைச் சேர்ந்தசெல்லையா சுப்பிரமணியம் [இளைப்பாறிய பொலிஸ் சாரதி] அகாலமரணமானார் அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், மணிபத்மன் [ஜேர்மனி], மணிவண்ணன் [ஜேர்மனி] மணிவதனி [89 வர்த்தகபீட மாணவி சாவகச்சேரி இந்துக் கல்லூரி], மணிசேகரன் [93 வர்த்தகபீட மாணவன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மணிதரன் (93 வர்த்தகபீட மாணவன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜா (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்) மகேஸ்வரன் [யாழ்ப்பாண எலெக்ரிக்கல்ஸ்), கந்தசாமி (பகேஸ் இன்சன்ஸ் சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (05-01-1993) 10 00 மணியளவில் வேவில மயானத்தில் நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்

[3931] மனைவி, பிள்ளைகள்

வித்தார்.

தலைவரிடமிருந்து பரிசு பெற்ற கலைஞர்களின் விபரம் வருமாறு:

### நடிகைகள்

செல்வி இ சுரேகினி, திருமதி தி. கமலாம்பிகை, திருமதி ம. தவமணிதேவி, செல்வி கு. இதயராணி, செல்வி அ சகுந்தலா, செல்வி அ. மாங்கனி, திருமதி சந்திரா, செல்வி மதி, செல்வி ஜெயந்திமாலா.

### நடிகர்கள்

கி. தவராசா, இ. சந்திரரூபன், ச. கந்தசாமி, வே. கோபி, ச. ஜேசுதாஸ், ந. சிவபாதம், அ. அழகேஸ்வரன், செ. அறிவழகன், த. திருச்செல்வம், ச. மோகனதாஸ், திரு. அருளம்பலம் திரு எஸ். பி. செல்வன் (கவிஞரும் உதவி இசைஅமைப்பாளரும்)

### பின்னணி இசைக் கலைஞர்கள்

திரு. ச. மகாலிங்கம், திரு சி. மனோகரன், திரு. அருணா, திருமதி புவனா இரத்தினசிங்கம்.

### படப்பிடிப்பாளர்கள்

செல்வன் சுதா, செல்வன் வ. சந்திரன்

### இயக்குனர்

திரு. பொ. தாசன்

### போராளிக் கலைஞர்கள்

முகுந்தன், அறிவு, தங்கப்பா, அருணன், வாசுராசா, தென்முகன் (சாந்தன்), தன்னவி(கீர்த்தி), சங்கர், சாந்தன்

இவ் வைபவத்தில் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவைஇரத்தினதுரை, நிதர்சனம் பொறுப்பாளர் திரு பரதன், மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ஜெயா ஆகியோரும் பங்குபற்றினர்.

### கிளாலி

ந்தவர்களின் பூதவுடல்கள் சிலவும் நேற்று கிளிநொச்சியிலிருந்து கிளாலிக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று நள்ளிரவு எம். செல்வரட்ணம் செ ஐங்கரன் உட்பட காயமடைந்த மூவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

### தமிழீழம்

கல்வி மேம்பாட்டு பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்றவர்களுக்கு கோட்ட ரீதியில் பரிசில்கள் வழங்க பேரவை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக இதன் செயலாளர் நா. க. சண்முகநாதபிள்ளை தெரிவித்துள்ளார். (17)